# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாடு

Ø பண்டைய தமிழகமானது **சேர**, **சோழ**, **பாண்டிய நாடு** என்ற முப்பெரும் அரசியல் பிரிவுகளைக் கொண்டது. இக்காலம் **சங்ககாலம்** எனப்பட்டது.

Ø களப்பிரர்கள் **கி.பி.**300 **முதல்** 600 **ம்** ஆண்டுவரை தமிழகத்தை ஆண்டனர்.

Ø **மூவேந்தர்** - சங்ககால ஆட்சியாளர்களின் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களே முன்னிலையில் இருந்தனர்.

### சேரர்கள்

Ø அசோகரின் கல்வெட்டுக்களில் **கேரள புத்திரர்கள்** என்'று குறிக்கப்படுபவர்கள் சேரர்கள்.

Ø தற்கால கேரளத்தையும், தமிழ்நாட்டு மேற்கு பகுதியையும் ஆட்சி புரிந்தனர்.

Ø தலைநகரம் - **வஞ்சி**.

Ø துறைமுகப்பட்டினம் - **முசிறி**, **தொண்டி**.

Ø தமிழ்நாட்டில் தற்போதுள்ள **கரூர்** மாவட்டம்தான் வஞ்சி என்று குறிப்பிடப்படுகிறது.

Ø சங்க இலக்கியமான **பதிற்றுப்பத்து**, சேர அரசர்கள் குறித்தும், அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசுகிறது.

Ø கரூரை அடுத்த **புகழூரில்** கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள், சேரமன்னர்களின் மூன்று தலைமுறைகளை குறிப்பிடுகிறது.

Ø சேரர்கள் **பனம்பூ மாலை** அணிந்திருந்தனர்.

Ø **வில்லும்**, **அம்பும்** சேரர்களின் இலச்சினை ஆகும்.

**சோழர்**

Ø சோழர்கள் காவிரி வடிநிலப் பகுதியையும், தமிழ்நாட்டின் வடபகுதியினையும் ஆண்டனர்.

Ø தலைநகரம் - **உறையூர்**.

Ø துறைமுகம் - **காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார்**.

Ø சோழ மன்னர்களின் தலைசிறந்தவர் -**கரிகால் சோழன்**.

Ø சோழர்களின் இலச்சினை - **புலி**.

Ø கடியலூர் **உருத்திரங்கண்ணனார்** என்ற சங்ககால புலவர் காவிரிப்பூம்பட்டினம் குறித்து **பட்டினப்பாலை** என்ற நெடிய பாடலை இயற்றியுள்ளார்.

Ø காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தை **சிலப்பதிகாரம்** குறிப்பிடுகிறது.

Ø சோழர்கள் சதுர வடிவிலான **செப்பு** நாணயங்களை வெளியிட்டனர்.

**சோழப்பேரரசு**

Ø சோழர்களின் வரலாறு மிகவும் பழமையானது.

Ø மகாபாரதத்திலும், அசோகரின் கல்வெட்டுகளிலும், **மெகஸ்தனிஸ்**, **தாலமி** ஆகியோரது குறிப்புகளிலும் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.

Ø சங்க காலத்தில் சோழர்கள் **திருச்சி**, **தஞ்சாவூர்** ஆகிய பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர்.

Ø காவிரி ஆற்றின் குறுக்கே **கல்லணையைக் கட்டியவர் கரிகாற்சோழன்**.

Ø முற்காலச் சோழர்கள் தமது இறுதிக்காலத்தில் **உறையூரை** மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்களாயினர்.

**பிற்காலச் சோழர்கள்**

- Ø தென்னிந்திய வரலாற்றில் பிரபலமான நன்கறியப்பட்ட முடியாட்சி அரசுகளில் சோழர் அரசும் ஒன்று.
- Ø பண்டைய சோழ அரசு காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதியை மையப்பகுதியாகக் கொண்டிருந்தது.
- Ø அதன் தலைநகர் உறையூர் (இன்றைய திருச்சிராப்பள்ளி) ஆகும்.
- Ø கரிகாலனின் ஆட்சிக்காலத்தில் இவ்வரசு சிறப்பான இடத்தை வகித்தது.
- Ø ஒன்பதாம் நூற்றாண்டில் காவிரிக்கு வடக்கே ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலயன் சோழ வம்சத்தை மீட்டெடுத்தார்.
- Ø தஞ்சாவூரைத் தலைநகர் ஆக்கினார்.
- Ø பிற்காலத்தில் முதலாம் ராஜேந்திரனும் அவருக்குப் பின் வந்தோரும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராகக் கொண்டு சோழப்பேரரசை ஆட்சி செய்தனர்.

Ø **கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின்** இடையில் அதிகாரத்திற்கு வந்த சோழர்கள், பிற்காலச் சோழர்கள் அல்லது பேரரசுச் சோழர்கள் என அழைக்கப்பட்டனர்.

Ø பிற்காலச் சோழர்களின் எழுச்சிக்கு அடித்தளமிட்டவர் **விஜயாலயச்சோழன் கி.பி**.850-87

Ø விஜயாலயச்சோழனின் மகன் **முதலாம் ஆதித்திய சோழன்** (**கி.பி**.871 - 907)

Ø ஆதித்திய சோழனின் மகன் **முதலாம் பராந்தகன்** (**கி.பி**.907 - 955)

Ø பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து அதன் தலைநகரான **மதுரையை** வென்றதால் **மதுரை கொண்டான்** என்று புகழப்பட்டார்.

Ø புகழ்பெற்ற **தக்கோலம் போரில்** இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தோற்று கி.பி.955ல் மரணமடைந்தார்.

Ø **ஆத்துலார்சாலை** என அழைக்கப்பட்ட இலவச மருத்துவமனைகள் தஞ்சாவூர் உட்பட பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

**முதலாம் இராஜராஜசோழன்** (**கி.பி**.985 - 1014)

- Ø **சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர்**.
- Ø மிகச்சிறந்த ஆட்சியாளர், சேர, பாண்டிய, சாளுக்கியர்களை வென்றவர்கள். **முந்நீர் பழந்தீவுகள்** எனப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றார்.
- Ø சேர மன்னன் பாஸ்கரவர்மனை **காந்தளூர்சாலை** என்ற இடத்தில் வென்றார்.
- Ø சிறப்பு பெயர்கள் **மும்முடிச்சோழன்**, **ஜெயங்கொண்டான்**, **சிவபாதசேகரன்** ஆகும். இவரது காலத்தில் தான் **தேவாரம்** தொகுக்கப்பட்டது.
- Ø கி.பி.1010-ஆம் ஆண்டு தஞ்சை **பிரகதீஸ்வரர் கோவிலை** கட்டினார்.
- Ø கி.பி.1014-ல் இயற்கை எய்தினார்.

**முதலாம் இராஜேந்திரன்** (**கி.பி**.1012 - 1044)

- Ø இராஜராஜசோழனின் மகன் ஆவார்.
- Ø வங்காள மன்னர் **மகிபாலனை** வென்றார். இவ்வெற்றியின் நினைவாக **கங்கை கொண்ட சோழபுரம்** என்னும் நகரை நிறுவினார்.
- Ø சிறப்பு பெயர்கள் - **கங்கை கொண்டான்**, **பண்டித சோழன்**, **கடாரம்கொண்டான்** போன்றவை ஆகும்.

## **சோழப்பேரரசின் சரிவு**

- முதலாம் ராஜேந்திர சோழனைத் தொடர்ந்து பதவியேற்ற மூவரும் திறமை வாய்ந்த அரசர்களாக இல்லை.
- மூன்றாவதாகப் பதவியேற்ற வீர ராஜேந்திரனின் மகன் அதி ராஜேந்திரன் உள்நாட்டுக் கலகம் ஒன்றில் கொல்லப்பட்டார்.
- அவருடன் விஜயாலயனின் வழிவந்தோரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

### **முதலாம் குலோத்துங்க சோழன்**- ( **ராஜேந்திர சாளுக்கியன்** ) **கி.பி.**1071 - 1121)

- கீழைச் சாளுக்கிய இளவரசர் முதலாம் குலோத்துங்கன் எனும் பெயரில் சாளுக்கிய - சோழ வம்சத்தின் ஆட்சியை அவர் தொடங்கி வைத்தார்.
- சிறந்த நிர்வாகி. நிலங்களை அளந்து வரி விதித்ததோடு சுங்க வரியை நீக்கி வணிகத்தை எளிமைப்படுத்தியதால் இவர் **சுங்கம் தவிர்த்த சோழன்** எனப் போற்றப்பட்டார்.
- இவர் **ஜெயங்கொண்டார்**, **ஒட்டக்கூத்தர்**, **புகழேந்தி**, **கம்பர்** முதலான கவிஞர்களை ஆதரித்தார்.
- 1279-ல் பாண்டிய அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்து பாண்டியர் ஆட்சியை இன்றைய தமிழகத்தில் நிறுவினார்.
- அத்துடன் சோழ வம்சத்தின் ஆட்சி முடிவுற்றது.

### **சோழப்பேரரசு சிதைவுறுதல்**

- மூன்றாம் இராஜேந்திரன் காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத்தொடங்கியது. காடவராயன் போன்ற குறுநில

மன்னர்களின் எழுச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைக்குலையச் செய்தது.

- பாண்டிய மன்னன் இரண்டாம் **ஜடா வர்மா சுந்தரபாண்டியன்**, சோழ நாட்டின் கடைசி அரசனான 3-**ம் இராஜேந்திரனை** வென்று, சோழ நாட்டை கைப்பற்றினார்.

**சோழர்களின் ஆட்சிமுறை**

- சிறந்த திறமையான நிர்வாக அமைப்பு. நிர்வாகத்தின் அடிப்படை அலகு **ஊர்** என்பதாகும்.
- பல ஊர்கள் சேர்ந்தவை **வளநாடு** என்றும், பல வளநாடுகள் சேர்ந்து **மண்டலம்** என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக **சோழ நாடு** விளங்கியது.
- முதலாம் பராந்தக சோழன் காலத்தை சார்ந்த **உத்திரமேரூர் கல்வெட்டு** கிராம நிர்வாகத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறது.
- ஒவ்வொரு கிராமமும், **ஊர் அல்லது சபை** என்ற அமைப்பின் மூலம் நிர்வகிக்கப்பட்டது.
- கிராம சபை உறுப்பினர்கள், **குடவோலை** முறையின் படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- **வாரியங்கள்** என்ற விரிவான நிர்வாக அமைப்பும் நடைமுறையில் இருந்தது.

**சமூக பொருளாதார நிலை**

- சாதி முறை வழக்கில் இருந்தது.
- **சதி**, **தேவதாசி** போன்ற வழக்கங்கள் நடைமுறையில் இருந்தன.
- பெண்கள் "**சிறுபாடு**" என்றும் **சிறுசேமிப்புப்** பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

**<u>வரிபொத்தகம்</u>**

- வரிவிதிப்பு நடைமுறைகளை சோழர் காலத்தில் **ஓலைச்சுவடிகளில்** எழுதித் தொகுத்தனர். இது **வரிபுத்தகம்** எனப்பட்டது.
- இராஜராஜன் காலத்தில் (கி.பி.1001) வரி விதிப்புக்கான கணக்கெடுப்புப் பணி **சேனாதிபதி குறவன்** என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

**<u>சமயமும், கல்வியும்</u>**

- சோழ வேந்தர்கள் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தனர்.
- ஆலயங்களும், மடங்களும் கல்வி மையங்களாக விளங்கின.

**<u>இலக்கியம்</u>**

- சோழர் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு புத்துணர்வு தந்தது.
- **சேக்கிழாரால் பெரியபுராணமும்** (**திருத்தொண்டார் புராணம்**) **திருத்தக்க தேவரால் சீவகசிந்தாமணியும் எழுதப்பட்டன**.
- உரையாசிரியர்களான **இளம்பூரணர்**, **நச்சினார்க்கினியார்**, **பரிமேலழகர்** ஆகியோர் சோழர் காலத்தவரே ஆவார்.

**கலையும் கட்டிடக்கலையும்**

- திராவிட பாணியிலான கலைகளும், கட்டிடக்கலையும் சோழர்கள் காலத்தில் முழு வடிவத்தைப் பெற்றன.
- **திருச்சிராப்பள்ளி**, **திருவரங்கம்**, **தஞ்சாவூர்**, **கும்பகோணம்**, **சிதம்பரம்**, **திருவண்ணாமலை**, **சுசீந்திரம்**, **திருவனந்தபுரம்**, உடுப்பி போன்ற இடங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் சிறப்பு மிக்கவை.
- நார்தா மலையின் விஜயாலய சோழீஸ்வரம் கொடும்பாளூரில் ஐவர் கோயில் ஆகியன முற்கால சோழர்காலத்தை சேர்ந்தவை.
- பிரகதீஸ்வரர் ஆலயம் உலகத் தொன்மையான சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இதன் விமானத்தின் உயரம் 216 அடி ஆகும்.
- தஞ்சாவூர் சுப்பிரமணியர் ஆலயம், தாராசுரம், அறிவட்டேஸ்வரர் கோவில், கும்பகோணம் அருகே திருபுவனம் என்னும் இடத்தில் உள்ள கம்பஹரேஸ்வரர் அல்லது திருபுவனேஸ்வரர் கோவில் ஆகியன பிற்கால சோழர்களால் கட்டப்பட்டவை.

**சிற்பங்கள்**

- முதலாம் இராஜராஜனின் சிற்பம் கலைநயம் கொண்டது.
- எண்கரங்களுடன் காட்சி தரும் துர்க்கை சிற்பம் மிகவும் அழகு வாய்ந்தது.
- கும்பகோணம் நாகேஸ்வரர் கோயிலில் உள்ள நடராசர், அர்த்தநாரீஸ்வரர் ஆகிய உலோக சிலைகள் சோழர் கலையம்சத்திற்கு சிறந்த உதாரணங்கள் ஆகும்.

## உத்திரமேரூர் கல்வெட்டுக்கள்

- இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கிராமம் பிராமணர்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமமாகும்.
- இக்கிராமத்தில் கிராம சபைக்கான உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறித்து தெளிவாக விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன.
- ஒவ்வொரு குடும்பிலிருந்தும் (வார்டு) உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மொத்தம் 30 குடும்பங்கள் இருந்தன. போட்டியிடும் ஆடவர் 35 -70 வயது வரம்புக்குள் இருத்தல் வேண்டும்.
- வேதநூல்களிலும், சமய நூல்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பதும், நில உரிமையாளராகவோ, சொந்த வீடு உடையவராகவோ இருக்க வேண்டும் என்பவை தகுதிகளாகும்.
- தேர்ந்தெடுக்கும் முறை - ஒவ்வொரு குடும்பிலிருந்தும் தகுதியுடைய வேட்பாளர்களின் பெயர்கள் பனையோலைத் துண்டுகளில் எழுதப்படும்.
- அவை மட்பாண்டம் ஒன்றில் போடப்படும். மன்றத்தின் மூத்த உறுப்பினர் ஒரு சிறுவனை அழைத்து குடத்துக்குள் உள்ள ஓலைத் துண்டுகளை எடுக்கச் சொல்லி அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவிப்பார். இம்முறையின் படி பல குழுக்கள் முடிவு செய்யப்படும்.
- குற்றம் புரியும் உறுப்பினர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்றும் அவர்கள் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர்கள் என்றும் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

## மெழுகு படிவ வளர்ப்பு

- இம்முறை சோழ கைவினைக் கலைஞர்களால் வெண்கலச் சிலை செய்ய பயன்படுத்தப்பட்ட முறையாகும்.

**<u>வருவாய்</u>**

- சோழ அரசின் பொது வருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது.
- நிலவரியானது “காணிக்கடன்” என அழைக்கப்பட்டது.
- மகசூலில் மூன்றில் ஒரு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரி பெரும்பாலும் தானியமாகவே வசூல் செய்யப்பட்டது.
- நிலவரியைத் தவிர தொழில் வரிகளும் வணிகத்தின் மீதான சுங்கவரிகளும் வசூலிக்கப்பட்டன.

**<u>நிலம் சார்ந்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு</u>**

- சோழ அரசர்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை அரசு அதிகாரிகளுக்கும், பிரமாணர்களுக்கும், கோவில்களுக்கும் (தேவதானக் கிராமங்கள்) மத நிறுவனங்களுக்கும் கொடையாக வழங்கினர்.
- சமண, சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் “பள்ளிச்சந்தம்” என அழைக்கப்பட்டது.
- “வேளாண்வகை” என்னும் நிலங்களின் உடைமையாளர்கள் வேளாளர் என்றழைக்கப்பட்டனர்.
- வேளாளரில் ஒரு பிரிவினரான “உழுகுடி” என்போர் நிலங்களின் உடைமையாளர்களாக இருக்க இயலாது. அவர்கள் பிரம்மதேய, வேளாண்வகை நிலங்களில் வேளாண்பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது.
- மொத்த விளைச்சலில் வேளாண்வகை நிலவுடைமையாளர்கள் “மேல்வாரத்தைப் (விளைச்சலில் பெரும்பகுதி) பெற்றனர்.
- உழுகுடிகள் “கீழ்வாரத்தைப்” (விளைச்சலில் சிறிய பகுதி) பெற்றனர்.
- “அடிமை” மற்றும் “பணிசெய் மக்கள்” என்போர் சமுதாயத்தின் கீழ்நிலையில் இருந்தனர்.
- சமூகத்தின் இடை மட்டத்தில் போர் செய்வோரும் வணிகர்களும் இடம் பெற்றனர்.

**நீர்ப்பாசனம்**

- சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் வழங்கினர்.
- கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- காவிரியின் கழிமுகப் பகுதியில் குறுக்கும் நெடுக்குமாக மரபுசார்ந்த முறையில் நீரினைத் திசைமாற்றி விடுவதற்கான "வடிவாய்க்கால்கள்" அமைக்கப்பட்டிருந்தன.
- தேவைப்படும் நீரைக் கொண்டுவருவது "வாய்க்கால்". தேவைக்கு அதிகமான நீரை வெளியேற்றுவது "வடிகால்".
- பொதுமக்கள் அனைவருக்கும் சொந்தமான வாய்க்கால் "ஊர் வாய்க்கால்" என அழைக்கப்பட்டது.
- நாடு எனும் நிர்வாகப் பிரிவின் மட்டத்தில் பயன்பட்ட வாய்க்கால்கள் "நாடு வாய்க்கால்கள்" என குறிப்பிடப்பட்டன. நீர் விநியோகத்தில் சுற்றுமுறை நடைமுறையில் இருந்தது.

**மதம்**

- சோழர்கள் சைவத்தில் மீது மிகுதியான பற்றுக் கொண்டவராவர்.
- சிவபெருமானின் திருவிளையாடல்கள் சைவ அடியார்களான நாயன்மார்களால் பாடல்களாக இயற்றப்பட்டுள்ளன.
- நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட அவை "திருமுறைகள்" என அழைக்கப்படுகின்றன.

**கோவில்கள்**

- சோழர்கள் காலத்தில் பிரமாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன.
- தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் சோழர்களின் கலைகளான

கட்டடங்கள், சிற்பங்கள், செப்புச்சிலைகள், ஓவியங்கள், படிமவியல் ஆகியவற்றின் களஞ்சியமாக உள்ளன.

**<u>சோழர்களின் கல்விப் பணி</u>**

- Ø சோழ அரசர்கள் கல்விப் பணிகளுக்குப் பெரும் ஆதரவு நல்கினர்.
- Ø முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (தற்போதைய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள) எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார்.
- Ø இன்றைய புதுச்சேரிக்கு அருகேயுள்ள திருபுவனை எனும் ஊரிலும், இன்றைய செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடலிலும் முறையே 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்ற கல்லூரிகள் நிறுவப்பட்டன.
- Ø உன்னதமான இலக்கியங்களான “பெரியபுராணமும் கம்பராமயணமும்” இக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாகும்.

**<u>வணிகம்</u>**

- Ø சோழர்களின் காலத்தில் வணிகம் தழைத்தோங்கியது.
- Ø “அஞ்சு - வண்ணத்தார் ”. “ மணி- கிராமத்தார்” எனப்படும் வணிகக் குழு அமைப்புகளைச் (கில்டு) சேர்ந்த வணிகர்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- Ø அஞ்சு - வண்ணத்தார் குழுவானது மேற்கு ஆசிரியர்கள், அராபியர்கள், யூதர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.
- Ø மணி - கிராமத்தார் வணிகக் குழு அமைப்பைச் சேர்ந்த வணிகர்கள் உள்நாட்டு வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் என சொல்லப்படுகிறது.
- Ø காலப்போக்கில் அவ்விரு அமைப்புகளும் ஐநூற்றுவர்” , திசை- ஆயிரத்து ஐநூற்றுவர்” எனும் பெயர்களில் ஒருங்கிணைந்தன.
- Ø அவை கர்நாடக மாநிலம் ஐகோலில் இருந்த தலைமை அமைப்பின் வழிகாட்டுதலில் செயல்பட்டன.

**ஓவியங்கள்**

- சோழர்களது சுவர் ஓவியங்கள் **தஞ்சாவூர்**, **திருமையம்**, **காஞ்சி கைலாசநாதர் கோயில்**, **நார்தாமலை விஷ்ணு கோயில்** ஆகிய இடங்களில் காணலாம்.

**இசை**

- நுண்கலை எனப்படும் இசைக்கலை வளர்ச்சிபெற்றது.
- கர்நாடக இசைக்கு சோழர்காலத்தில்தான் அடித்தளம் இடப்பட்டது.
- பரதநாட்டியம் என்னும் அழகு மிளிரும் ஆடற்கலையும் தோன்றியது.

**சோழர்ஆட்சியின் விளைவுகள்**

- **கி**.**பி**.850**ல் தொடங்கி கி**.**பி**.1279 **வரை சுமார்** 430 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த சோழர்கள் காலத்தில் தமிழகம் பல துறைகளில் வளர்ச்சி கண்டது.
- தமிழ் சமுதாயத்தின் பெருமை திக்கெட்டும் பரவியது.

**பாண்டியர்**

- பாண்டியர்கள் தென்தமிழகத்தை ஆண்டவர்கள்.
- **தலைநகரம்** - **மதுரை**.
- அசோகரது கல்வெட்டுகளில் பாண்டியர் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

Ø தமிழ்ச்சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று பாண்டிய அரசர்களை தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.

Ø மாங்குளத்தில் கண்டறியப்பட்ட தமிழ் **பிராமி கல்வெட்டுக்கள்** பாண்டிய நெடுஞ்செழியனை குறிப்பிடுகிறது.

Ø **நெடியோன்**, **முடத்திருமாறன்**, **பலயாகசாலை**, **முதுகுடுமிபெருவழுதி** ஆகியோர் குறிப்பிடத்தக்க பாண்டிய மன்னர்கள்.

Ø பாண்டியர்களின் இலச்சினை **மீன்**.

Ø அன்றைய காலக்கட்டத்தில் பரந்திருந்த பாண்டியப் பேரரசானது இன்றை மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

Ø மெகஸ்தனிஸ், பிளினி ஆகியோரது குறிப்புகளிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் யுவான்சுவாங், மார்க்கோபோலோ ஆகியோரின் பயணக் குறிப்புகளிலும் பாண்டியரின் வரலாற்று செய்திகளை அறியலாம்.

Ø இவர்களின் வரலாற்றை முற்காலப் பாண்டியர்கள், முதலாம் பாண்டியப் பேரரசு மற்றும் இரண்டாம் பாண்டியப் பேரரசு என மூன்று காலகட்டங்களாக வகைப்படுத்தலாம்.

**முற்காலப் பாண்டியர்கள்**

- Ø தமிழை வளர்க்க தமிழ்ச் சங்கங்கள் அமைத்த பெருமைப் பெற்றவர்கள்.
- Ø தென்தமிழகத்தை ஆண்டவர்கள்.

Ø **தலைநகரம்** - **மதுரை**.

Ø அசோகரது கல்வெட்டுகளில் பாண்டியர் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

- தமிழ்ச்சங்கங்களை நிறுவி ஆதரவு அளித்தவர்கள் என்று பாண்டிய அரசர்களை தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.
- தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பற்றிய போது முற்காலப் பாண்டியர் ஆட்சியானது முடிவுக்கு வந்தது.

**முதலாம் பாண்டியப் பேரரசு (கி.பி.**550 - 950)

- பாண்டிய அரசர் கடுங்கோன், களப்பிரர்களை வென்று கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களின் ஆட்சியை மலரச் செய்தார்.
- அரிகேசரி மாறவர்மன், இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன், முதலாம் வரகுணன் மற்றும் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆகியோர் இப்பேரரசின் முக்கிய மன்னர்கள் ஆவர்.

**முடிவு**

- ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் வழித்தோன்றல்கள் பல்லவ, சோழர்களோடு பலமுறை போரிட நேரிட்டது.
- கி.பி.10 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்கள் பலமுறை போரிட்டும் தமது பெருமையை நிலைநிறுத்த முடியவில்லை.
- அவர்களோடு நடந்த தொடர் போராட்டங்களில் பாண்டிய பேரரசு சிதறுண்டு போனது.

**இரண்டாம் பாண்டியப் பேரரசு**

- கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மெல்ல சோழரின் தலைமையிலிருந்து விடுபட்டு தங்களது தனியரசை நிறுவினர்.

- இந்நிலையில் விக்கிரம பாண்டியனுக்கும், வீர பாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமை போர் ஏற்பட்டது.
- சோழவேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதரவோடு விக்கிரம பாண்டியன் ஆட்சியை பிடித்தார்.
- முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் தமது தந்தை விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரை அடுத்து ஆட்சி செய்ய இவரது சகோதரன் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு மகுடம் சூட்டினார்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** ( **கி.பி.**1216 - 1238 )

- இவர் கி.பி.1219 இல் மூன்றாம் குலோத்துங்க சோழனை போரிட்டு வென்றார்.
- எனினும் ஹொய்சாளர்கள் சோழர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதால் தான் வென்ற சோழ நாட்டை குலோத்துங்கனிடமே கொடுத்தார்.
- இதனால், சோணாடு வழங்கியருளிய சுந்தரப்பாண்டியன் எனப் புகழப்பட்டார்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** ( **கி.பி.**1238 - 1253 )

- இவர் ஆட்சியேற்றபின் ஹொய்சாள மன்னர் சோமேஸ்வரன் உதவியுடன் சோழ மன்னன் மூன்றாம் ராஜேந்திரனிடமிருந்து சில பகுதிகளை மீட்டெடுத்தார்.

**முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ( கி.பி.1253 - 1268 )**

- இவர் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரது காலத்தில் பாண்டியப் பேரரசு வடக்கே நெல்லூர், கடப்பா முதற்கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரை விரிவு பெற்றது.
- எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியன், மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன், பொன்வேய்ந்த பெருமாள் என்றெல்லாம் இவர் சிறப்பிக்கப்பட்டார்.
- இவரது மகன் முதலாம் மாறவர்மன், குலசேகரன் (கி.பி.1268-1308) ஆட்சியின் போது பேரரசு மேலும் வலுப்பெற்றது.
- இவர் இலங்கையையும், சேரர்களிடமிருந்து கொல்லம் பகுதியையும் வென்றார்.
- இதனால் கொல்லம் கொண்ட பாண்டியன் என்று சிறப்பிக்கப்பட்டார்.
- இவரது ஆட்சிக்குப் பிறகு பாண்டிய நாட்டின் புகழ் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

**பாண்டிய பேரரசின் வீழ்ச்சி**

- முதலாம் மாறவர்மன் குலசேகரரின் மகன்களான சுந்தர பாண்டியனுக்கும், வீர பாண்டியனுக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பாண்டிய நாடு பிளவுபட்டது.
- சுந்தர பாண்டியன் டெல்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார். அலாவுதீன் தமது தளபதி மாலிக்காபூர் என்பாரை அனுப்பி சுந்தரப் பாண்டியனுக்கு ஆட்சியை மீட்டுத்தந்தார்.
- மதுரை சுல்தான்களின் எழுச்சியினால் முழுமையாக பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**பாண்டியர்களின் நிர்வாகம்**

- பாண்டிய நாடு முழுவதும் பாண்டிய மண்டலம் எனப்பட்டது. மண்டலமானது பல வளநாடுகளாகவும், வளநாடு பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது.
- மன்னர் தமக்கு உதவியாக அரையர்கள் எனப்பட்ட அமைச்சர்களையும், படைத்தளபதியையும் நியமித்துக் கொண்டார்.

**உள்ளாட்சி**

- அறநிலை, நீர்நிலை நாணயம், வரித்தண்டல் மற்றும் நீதி வாரியங்கள் என்ற ஐந்து வாரியங்களும் ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகித்தன.

**தொழில்**

- வேளாண்மை, வாணிபம் மக்களின் முக்கியத் தொழில். வேளாண் தொழில் செய்வோர் “பூமி புத்திரர்கள்” எனப்பட்டனர்.
- பாண்டிய நாடு முத்துக்குளிக்கும் தொழிலில் சிறந்து விளக்கியது. கொற்கை, தொண்டி சிறந்த துறைமுகங்களாக விளங்கின.

**இலக்கியம்**

- திருவாசகம் மாணிக்க வாசகரால் எழுதப்பட்டது.
- ஆண்டாள் திருப்பாவையையும், நம்மாழ்வார் திருப்பல்லாண்டையும், வில்லிப்புத்துாரார் மகாபாரதத்தையும், அதிவீரராம பாண்டியன் நைடதம் என்னும் நூலையும் எழுதினர்.

- சேயூர் முருகன் உலா மற்றும் ரத்தினகிரி உலா ஆகிய நூல்களை ஸ்ரீகவிராயர் எழுதினார்.

**கலைகளும், கட்டிடக் கலையும்**

- கோயில் கட்டிடக் கலையில் கருவறை, விமானம், பிரகாரம், கோபுரம் ஆகிய கட்டுமானப் பணிகளில் பாண்டியர்களின் கலைப்பாங்கு தனித்துவம் பெற்றது.
- பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக்குவதிலும் முத்திரை பதித்தனர். (எ.கா. திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சிராப்பள்ளி, குன்றக்குடி, சித்தன்ன வாசல் ஆகியவற்றைக் கூறலாம். கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானக் கோயில்கள் பாண்டியர் காலத்தவையாகும்.)
- ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபன் காலத்து சுவரோவியத்தை சித்தன்ன வாசல் குடைவரையில் காணலாம்.

**பிற்காலப் பாண்டியர்கள்**

- கி.மு. (பொ.ஆ.மு) நான்காம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்தியாவைக் குறிப்பிட்ட இடைவெளிகளோடு ஆட்சி செய்த மூன்று பழமையான அரசவம்சங்களுள் பாண்டியர்கள் அடங்குவர்.
- முத்துக்குளித்தலோடு தொடர்புடைய கொற்கை, தொடக்காலத்தில் அவர்களின் துறைமுகமாகவும், தலைநகரமாகவும் இருந்ததாகக் கருதப்படுகிறது.
- சங்ககாலப் பாண்டியர்களின் கீழ் மதுரை நகர் மாபெரும் பண்பாட்டுமையமாகத் திகழ்ந்தது.
- கி.பி.(பொ.ஆ) 6-ஆம் நூற்றாண்டில் களப்பிரர்களை வெற்றிகொண்டு பாண்டியர்கள் தென்தமிழகத்தில் தங்களை மீண்டும் வலுவாக நிறுவிக் கொண்டனர்.

**பாண்டிய அரசு மீண்டெழுதல் (கி.பி.(பொ.ஆ) 600-920)**

- கடுங்கோல் எனும் பாண்டிய அரசன் 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்களிடமிருந்து பாண்டியர்களின் பகுதிகளை மீட்டார்.
- அரிகேசரி மாறவர்மன் எனும் வலிமை மிக்க முதல் பாண்டிய அரார் கி.பி.(பொ.ஆ)642-இல் அரியணை ஏறினார். அவர் பல்லவ அரசர்கள் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் சமகாலத்தவராவார்.
- அரிகேசரி மாறவர்மன் சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியனே என அடையாளப்படுத்தப்படுகிறார்.

**தகவல் பேழை**

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய பின்னர் அரிகேசரி சுமார் 8000 சமணர்களைக் கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. எண்ணிக்கை மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பினும் சைவத்திற்கு மாறிய பின்னர் அரிகேசரியின் சமண எதிர்ப்புப் போக்கு சந்தேகத்திற்கு இடமில்லாதது.

- அரிகேசரிக்குப் பின்னர் பாண்டியர் அரசவம்சத்தின் மகத்தான மன்னான ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் (முதலாம் வரகுணன் ) (756-815) ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- அவரே வேள்விக்குடிச் செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.

- பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற ஸ்ரீமாற, ஸ்ரீவல்லபன், இரண்டாம் வரகுணன் ஆகியோர் பல்லவர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.
- முதலாம் பராந்தகனிடம் தோல்வியடைந்த பாண்டிய அரசன் இரண்டாம் ராஜசிம்மன் 920-இல் நாட்டைவிட்டு வெளியேறினார்.
- இவ்வாறு கடுங்கோனால் மீள்எழுச்சி பெற்ற பாண்டியர் ஆட்சி முடிவுற்றது.

**பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி** (1190 - 1310)

- அதிராஜேந்திரனின் (விஜயாலயனின் வழிவந்த கடைசி அரசர்) மறைவுக்குப் பின்னர் பாண்டிய நாட்டில் சோழ மண்டலாதிபதிகளின் ஆட்சி பலவீனமடைந்தது. அதன் விளைவாகப் பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் மட்டுமே எழுச்சி பெற்ற தமிழ் அரச வம்சமாக விளங்கினர்.
- மதுரை அவர்களின் தலைநகராகத் தொடர்ந்தது. அவ்வமயம் காயல் அவர்களின் முக்கிய துறைமுகமாயிற்று.
- வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற பயணியான மார்க்கோபோலோ இரண்டு முறை (1288, 1293) காயலுக்கு வருகை தந்தார்.
- இத்துறைமுக நகர் அராபிய, சீனக் கப்பல்களால் நிரம்பியிருந்தது என்றும், விறுவிறுப்பான வணிக நடவடிக்கைகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார்.

**தகவல் பேழை**

பாண்டிய அரசு " செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என மார்க்கோ போலோ புகழாரம் சூட்டுகிறார். இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக்கற்களையும், முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார். தன்னுடைய பயணக் குறிப்புகளில் "சதி" (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும்

அரசர்களின் பலதார மணத்தையும் பதிவு செய்துள்ளார்.

- அரசர்களும், உள்ளூர் தலைவர்களும் " மங்கலம்" அல்லது " சதுர் வேதிமங்கலம்" எனும் பிராமணர் குடியிருப்புகளை உருவாக்கினர்.
- நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் " பூமிபுத்திரர்" அல்லது "வேளாளர்" என விவரிக்கப்பட்டுள்ளனர்.
- வரலாற்று ரீதியாக அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த மக்களாகையால் அவர்கள் " நாட்டுமக்கள்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- இச்சமூக மக்கள் ஒன்றிணைந்த மன்றம் " சித்திர - மேழி - பெரிய நாட்டார் " என அழைக்கப்பட்டது.

**<u>அரசு அதிகாரிகள்</u>**

- பிரதம மந்திரி " உத்தம மந்திரி" என அழைக்கப்பட்டார்.
- முக்கிய வரலாற்று ஆளுமைகளான மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாரன்காரி ஆகியோர் அமைச்சர்களாகப் பணியாற்றினர்.
- அரசுச் செயலகம் " எழுத்து மண்டபம் " என அழைக்கப்பட்டது.
- மிகவும் மதிக்கப்பட்ட அதிகாரிகள் " மாறன் - எயினன் ", " சாத்தன் - கணபதி", "ஏனாதி - சாத்தன் ", " திற - திறன்" , மூர்த்தி- எயினன்", ஆகியோரும் மற்றவருமாவர்.
- " பள்ளி - வேலன்", " பராந்தகன்- பள்ளி- வேலன்", " மாறன் - ஆதித்தன்", " தென்னவன் - தமிழ்வேள்" ஆகியவை படைத் தளபதிகளின் பட்டங்களாகும்.

**<u>நிர்வாகப் பிரிவுகள்</u>**

- சோழநாட்டில் இருந்ததைப்போலவே “ பாண்டியநாடு ” பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- மண்டலங்கள் “ வளநாடுகள் ” என அழைக்கப்பட்டன.
- வளநாடுகள் பல “ நாடுகளாகவும்”, “கூற்றங்களாகவும்” , பிரிக்கப்பட்டன.
- நாடுகளை நிர்வகித்தவர்கள் “நாட்டார்” ஆவர்.
- நாடுகளும் கூற்றங்களும் மங்கலம், நகரம், ஊர் , குடி எனும் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன.

**கிராம நிர்வாகம்**

- திருநெல்வேலி மாவட்டம் மானூர் என்னும் ஊரில் உள்ள கி.பி. (பொ.ஆ) 800-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிராம நிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.
- சிவில் இராணுவ அதிகாரங்கள் ஆகிய இரண்டும் ஒரே நபரிடம் வழங்கப்பட்டிருந்தன.

**நீர்ப்பாசனம்**

- வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும், நீர்நிலைகளுக்கு நீர் கொண்டு செல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன.
- தென்தமிழகத்தில் சோழர்களைப் போலவே பாண்டியர்களும் புதிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தனர்.

**மதம்**

- வேள்விக்குடிச் செப்பேடுகளும் ஏனைய பொறிப்பியல் சான்றுகளும் சிறந்த பாண்டிய அரசர்கள் ஒவ்வொருவரும்

செய்த அஸ்வமேதயாகம், ஹிரண்ய கர்ப்பம், வாஜ்பேய வேள்வி போன்றவற்றை குறிப்பிடுகின்றன.

- பாண்டிய மன்னர்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் சமமாகவே கருதினர் என்பதைப் பொறிப்புச் சான்றுகளின் தொடக்கப் பகுதிகள் உணர்த்துகின்றன.
- அக்கால பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றை ஆதரித்து வளர்த்தனர்.

**கோவில்கள்**

- பெரிய வடிவிலான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய ஒற்றைக்கல்தூண்கள் இடைக்காலப் பாண்டியர்களின் தனித்தன்மை வாய்ந்த பாணியாகும்.
- சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசர், சுப்ரமணியர் ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் இக்கோவில்களில் காணப்படும் சிறந்த கலை வடிவங்களாகும்.
- வரலாற்று சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் பாண்டியர் பேராதரவு நல்கினர்.

**வணிகம்**

- காயல் துறைமுகத்தில் மாலிக் உல் இஸ்லாம் ஜாமலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம் செயல்பட்டது.
- பாண்டிய அரசர்களுக்குக் குதிரைகள் எளிதாகக் கிடைப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செய்து கொடுத்தது.
- சம்பிரதாய விழாக்களுக்கும், போர்புரிவதற்கும் குதிரைகள் தேவைப்பட்டதால் அரசர்கள் குதிரைகளுக்காக முதலீடு செய்தனர் என்று மார்க்கோபோலோவும், வாசப்பும் குறிப்பிட்டுள்ளனர்.
- "குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் " குதிரைச் செட்டிகள்" என அழைக்கப்பட்டனர்.
- பாண்டியர்களின் துறைமுகங்களில் மிகவும் விறுவிறுப்பாக வணிகம் நடைபெற்ற துறைமுகம் கிழக்குக் கடற்கரையிலிருந்த காயல்பட்டினம் ஆகும்.
- இது இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

- வணிகப் பரிமாற்றங்கள் தங்க நாணயங்கள் மூலம் நடைபெற்றதால் நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, கழஞ்சு, பொன் எனப் பலவாறு அழைக்கப்பட்டன.

## வேளிர் - குடித்தலைமை

- தமிழகத்தை ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் **வேளிர்** எனப்பட்டனர்.
- இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கடையெழு வள்ளல்களான **பாரி**, **காரி**, **ஒரி**, **நள்ளி**, **பேகன்**, **ஆய்**, **அதியமான்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பல்லவப்பேரரசு

- பல்லவப் பேரரசினை தோற்றுவித்தவர் சிம்மவிஷ்ணு.
  - பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம்
  - தமிழ்நாட்டில் சங்க காலம் முடிந்த பிறகு களப்பிரர்களின் ஆட்சி சுமார் 250 ஆண்டுகள் நீடித்தது.
  - பின்னர் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் தங்களது அரசை நிறுவினர்.
  - கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பேரரசுச் சோழர்கள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றும் வரை அவர்களது ஆட்சி தொடர்ந்தது.
  - தக்காணத்தில் ஆட்சி புரிந்த வாகாடகர்கள் என்ற பிராமண அரச குலத்தின் ஒரு பிரிவினரே பல்லவர்கள் என்று கூறப்படுகிறது.
  - கி.பி. 250 முதல் 350 வரையிலான முற்கால பல்லவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.

.

**<u>பிற்காலப்பல்லவர்கள்</u>** <u>(**கி.பி.**570-903)</u>

**<u>சிம்ம விஷ்ணு</u>**

Ø பிற்காலப் பல்லவ அரசர்களில் முதன்மையானவர் **சிம்மவிஷ்ணு**.

Ø இவர் வடக்கில் ஆந்திரப்பகுதியான **விஷ்ணுகுண்டு** முதல் தெற்கில் காவிரி ஆறுவரையில் விரிந்ததொரு பேரரசை நிறுவினார்.

Ø இதனால் இவர் "**அவனிசிம்மன்**" அதாவது "**உலகின் சிங்கம்**" எனப் புகழப்பட்டார்.

**<u>முதலாம் மகேந்திரவர்மன்</u>** <u>(**கி.பி.**600 - 630)</u>

Ø சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார்.

Ø சாளுக்கிய நாட்டின் அரசர் இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனை தோற்கடித்து பல்லவ நாட்டின் வட பகுதிகளை கைப்பற்றினார்.

Ø மகேந்திரவர்மன் தமது ஆட்சியின் தொடக்கத்தில் சமணசமயத்தை பின்பற்றினார். பின்னர் சைவ குரவர் அப்பர் என்பவரால் சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்.

Ø இவர் புள்ளலூர் என்ற இடத்தில் வெற்றி பெற்றதாக பல்லவர் கல்வெட்டு குறிப்பிட்ட போதிலும் இழந்த பகுதியை அவரால் மீட்க முடியவில்லை.

Ø குணபரன், சத்யசந்தன், சேத்தகாரி (கோயில்களை கட்டுபவன்), சித்திரக்காரப் புலி, விசித்திர சித்தன், மத்தவிலாசன் போன்ற சிறப்பு பெயர்கள் பெற்றிருந்தார்.

Ø மண்டகப்பட்டு என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு இவரை விசித்திரசித்தன் என்று புகழ்கிறது.

Ø செங்கல், மரம், சுண்ணாம்பு, உலோகம் போன்றவற்றை பயன்படுத்தாமல் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோருக்கு கோயில் அமைத்தவர் என்ற சிறப்பும் உண்டு.

Ø மத்தவிலாச பிரகாசனம் என்ற வடமொழி நூல் இவரால் இயற்றப்பட்டது. குடுமியான் மலை இசைக்கல்வெட்டு இவரது காலத்தது என்று கருதப்படுகிறது.

Ø பல்லவர் தலைநகர் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த சீனப்பயணி **யுவாங் டி சுவாங்**.

Ø **காஞ்சிபுரம்** தென்னிந்தியாவிலேயே மிகச்சிறந்த கல்வி மையமாக திகழ்ந்தது.

Ø காஞ்சியில் வாழ்ந்த **பண்டிதர் வத்சாயனார்**.

Ø **தர்மபாலர்** காஞ்சியிலிருந்து **நாளந்தாவிற்கு** சென்றவர்.

Ø **தண்டி அலங்காரம்** என்ற இலக்கண நூலை எழுதியவர் தண்டி.

Ø இவர் காஞ்சியில் வாழ்ந்த வடஇந்திய புலவர்.

## முதலாம் நரசிம்மவர்மன்

Ø முதலாம் நரசிம்மவர்மனின் சிறப்புப் பெயர் **மாமல்லன்**. **மற்போரில்** சிறந்தவன் என்பது இதன்பொருள்.

Ø சாளுக்கிய தலைநகரான வாதாபிக்கு படையெடுத்துச் சென்று வென்றதால் **வாதாபி கொண்டான்** என புகழப்பட்டார்.

Ø நரசிம்மவர்மன் ஆட்சியின் போது சீனப்பயணி **யுவான்சுவாங்** காஞ்சிக்கு வருகை தந்தார்.

Ø மாமல்லபுரத்தில் உள்ள **ஒற்றைக்கல் ரதங்கள் நரசிம்மவர்மன்** கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

Ø காஞ்சிக்கு அருகிலுள்ள மணிமங்கலம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இரண்டாம் புலிகேசிக்கு எதிராக அவன் பெற்ற வெற்றியை கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.

Ø இவரது ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

Ø மாமல்லபுரத்தை நிறுவியவரும் இவரே.

**இரண்டாம் நரசிம்மவர்மன் (ராஜசிம்மன்)-கி.பி.**695-722

Ø **இரண்டாம் நரசிம்மவர்மன்** காஞ்சிபுரத்தில் **கைலாசநாதர் கோயிலை க**ட்டினார்.

Ø மாமல்லபுரத்தில் கடற்கரை கோயில், பனைமலையில் **தாளதீஸ்வரர்** கோயில் உட்பட பல ஆலயங்களைக் கட்டினார்.

Ø சங்கரபக்தன், வாத்யவித்யாதரன், ஆகமப்பிரியன் போன்ற விருதுகளை சூட்டிக் கொண்டார்.

Ø இவரது ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

**இரண்டாம் பரமேஸ்வரவர்மன்** (**கி.பி.**728- 731)

Ø இரண்டாம் நரசிம்மவர்மனின் மகன்.

Ø **கி.பி.**728**ல்** அரியணை ஏறினார்.

Ø சாளுக்கிய மன்னர் **இரண்டாம் விக்கிரமாதித்தனால்** போரில் தோற்கடிக்கப்பட்டார்.

Ø **கங்கர்களோடு** நடைபெற்ற போரில் பரமேஸ்வரவர்மன் கொல்லப்பட்டார்.

Ø இவரது மரணத்திற்கு பிறகு இவரின் மகன்கள் ஆட்சிக்கு வராத காரணத்தினால் சிம்ம விஷ்ணுவால் தொடங்கப்பட்ட பிற்கால பல்லவ மரபு முடிவடைந்தது.

**இரண்டாம் நந்திவர்மன்** (**கி.பி.**731 - 796)

**ø** சிம்மவிஷ்ணுவின் தம்பியும், இரண்யவர்மனின் மகனுமான இரண்டாம் நந்திவர்மன் என்பவர் பல்லவ அமைச்சர்கள், கடிகைகளின் (கல்விநிலையங்கள்) உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் பல்லவ அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ø** சிறந்த விஷ்ணுபக்தர்.

**ø** காஞ்சியில் **வைகுந்த பெருமாள் கோயிலைக்** கட்டினார்.

**ø** **திருமங்கையாழ்வார்** இவரின் சமகாலத்தவர்.

**ø** கடைசி பல்லவ அரசர் **அபராஜிதனை** (கி.பி.885 - 903) சோழமன்னன் ஆதித்தன் தோற்கடித்தார்.

**ø** இவருக்'கு பிறகு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் ஆட்சி முடிவுற்றது.

**பல்லவர்களின் நிர்வாகம்**

**ø** சிறந்த நிர்வாக அமைப்பு.

**ø** பல்லவநாடு ராஷ்டிரம் எனக்கூடிய பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டது.

**ø** மண்டலங்கள் பல விசயங்களாகவும் (கோட்டங்களாகவும்) விசயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன.

**ø** நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம்

**ø** கிராமத்தை நிர்வகிக்க ஊர் அவை இருந்தது.

**ø** கிராமங்களின் வளர்ச்சிக்கு **ஏரிவாரியம்**, **தோட்டவாரியம்**, **கோயில்வாரியம் உள்ளிட்ட சுமார்** 20 வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**ø** வாரியங்கள் என்பவை நிர்வாக குழுக்கள் ஆகும்.

**ø** ஆலயங்களுக்கு மன்னர் அளித்த நிலக்கொடை 'தேவதானம்" எனப்பட்டது.

Ø பிராமணர்களுக்கு வழங்கிய நிலக்கொடை 'பிரமதேயமாகும்".

**இலக்கியம்**

Ø பல்லவ மன்னர்கள் கல்விக்கு பெரும் ஆதரவு தந்தனர்.

Ø முதலாம் **மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகாசனம்**, **பகவத்வியூகம்** ஆகிய நூல்களை எழுதினார்.

Ø **பாரவி** "**கீதார்ஜூனியம்**" என்ற நூலை எழுதினார்.

Ø **தண்டி** - **அவந்தி சுந்தரி கதாசாரம்** என்ற நூலை எழுதினார்.

Ø **பெருந்தேவனார்** - **பாரதவெண்பாவை** எழுதினார்

Ø **ஆழ்வார்களும்**, **நாயன்மார்களும்** எழுதிய பாடல்களில் பல பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

Ø புகழ்பெற்ற **நந்திக்கலம்பகம்** இக்காலகட்டத்தில் எழுதப்பட்டது.

Ø காஞ்சிக்கடிகை மிகவும் சிறப்பு வாய்ந்த கல்விக்கூடமாகும்.

Ø கடம்ப குலத்தின் நிறுவனரான மயூர சர்மன் காஞ்சிக்கு வந்து வேதங்களைக் கற்றான்.

Ø நந்திக் கலம்பகம் மற்றொரு முக்கிய தமிழ் இலக்கியம். ஆனால், இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

Ø இவர்கள் கால மண்டபங்களில் சிறப்பானவை மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம், வராக மண்டபம்.

Ø மாமண்டூர் கல்வெட்டு இசைப்பண் குறித்து விளக்குகிறது.

Ø முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது.

**பல்லவர் கால கலைகள்**

Ø திராவிடபாணியிலான கட்டிடக்கலை பல்லவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டது.

Ø இவர்களது கட்டிடக்கலையை நான்கு விதமாக பிரிக்கலாம்

Ø முதலாவது **பாறைக்குடைவு கோயில்கள்**. இவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. **எ.கா**. **மகேந்திரவாடி**, **மாமண்டூர்**, **தளவானூர்**, **சீயமங்கலம்**, **திருச்சி**, **திருக்கழுகுன்றம்** உள்ளிட்ட பல இடங்களில் உள்ளன.

Ø இரண்டாவது ஒற்றைக்கல் இரதங்கள், மண்டபங்கள். இவை மாமல்லபுரத்தில் உள்ளன.

Ø மூன்றாவது இராஜசிம்மன் வகையிலானது. **காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில்**, **மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக்கோயில்** இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

Ø நான்காவது கட்டுமான கோயில்கள். காஞ்சியில் உள்ள முக்தீஸ்வரர் ஆலயம், வைகுந்த பெருமாள் கோயில் ஆகியன இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

Ø பல்லவ மன்னர்கள் இசை, ஓவியம், நுண்கலைகளை ஆதரித்தனர்.

Ø இசையில் வல்லவராய் திகழ்ந்ததால் முதலாம் மகேந்திரவர்மன் "**சங்கீரணஜாதி**" என்று புகழப்பட்டார்.

Ø பல்லவர் காலத்து அழகிய ஓவியங்கள் **காஞ்சி கைலாசநாதர்** கோயிலில் காணப்படுகின்றன.

**<u>தக்காண அரசுகள்</u>**

Ø இந்தியாவின் தெற்கு பகுதியானது தக்காணம் அல்லது தட்சணபதம் என அழைக்கப்படுகிறது.

Ø இடைக்காலத்தில் சாளுக்கியர்களும். இராட்டிரக்கூடர்களும் தக்காணத்தில் ஆட்சியை ஏற்படுத்தினார்கள்.

Ø சாளுக்கியர்களின் வீழ்ச்சிக்கு பிறகு இவர்களிடம் திறை செலுத்தி வந்த குறுநில அரசர்களாகிய ஹொய்சாளர்கள், காகத்தியர்கள், யாதவர்கள் ஆகியோர் சுதந்திர அரசை நிறுவினார்கள் .

**<u>சாளுக்கியர்கள் (கிபி 6-12 ஆம் நூற்றாண்டுகள்)</u>**

Ø தக்காணத்தை ஆண்ட அரசுகளில் முக்கியமான ஆட்சியாளர்கள் சாளுக்கியர்கள். இவர்களது ஆட்சிக்காலத்தை 3விதமாக பிரிக்கலாம். அவை

Ø 1.முற்கால மேலை சாளுக்கியர்(கி.பி 6-8 ஆம் நூற்றாண்டுகள்)

Ø பிற்கால மேலைச்சாளுக்கியர்(கி.பி.10-12ஆம் நூற்றாண்டுகள்)

Ø கீழைச்சாளுக்கியர்(கி.பி 7-12 ஆம் நூற்றாண்டுகள்)

**<u>முற்கால மேலைச் சாளுக்கியர்(கி.பி. 6-8 ஆம் நூற்றாண்டுகள்)</u>**

Ø கி.பி ஆறாம் நூற்றாண்டில், இன்றைய கர்நாடக மாநிலம் அமைந்துள்ள பகுதியில் சாளுக்கியர்கள் தங்களது அரசாட்சியை ஏற்படுத்தினர்.

Ø தற்போது பதாமி என்று அழைக்கப்படும், பிஜப்பூர் மாவட்டத்திலுள்ள வாதாபி அவர்களுடைய தலைநகரமாய் விளங்கியது.

Ø ஜெயசிம்மன், இராமராயா ஆகியோரது காலத்தில்தான் சாளுக்கிய மரபு மெல்ல வளரத் தலைப்பட்டது.

Ø முதலாம் புலிகேசி வாதாபி சாளுக்கிய மரபிற்கு அடித்தளமிட்டவர் ஆவார்.

Ø சாளுக்கிய அரசர்களில் மிகச்சிறந்தவராக விளங்கியவர்

**<u>இரண்டாம் புலிகேசி</u>**

Ø இரண்டாம் புலிகேசி கங்கர், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகியோரை வென்றதோடு கி.பி.637இல் ஹர்சரின் படையெடுப்பை எதிர்த்து நின்று வெற்றியடைந்தார்.

Ø கி.பி.640இல் மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசி மீது படையெடுத்து புலிகேசியை கொன்றார்.

Ø முதலாம் விக்கிரமாதித்தியன், விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தியன் ஆகியோர் சாளுக்கிய மரபில குறிப்பிடத்தக்க மன்னர்களாவர்.

Ø இராட்டிரகூட மரபை தோற்றுவித்த தந்தி துர்க்கர் சாளுக்கியன் இரண்டாம் கீர்த்தி வர்மனை தோற்கடித்து வாதாபியை கைப்பற்றினார்.

**<u>பிற்கால மேலை சாளுக்கியர்கள் (கி.பி.10-12 நூற்றாண்டுகள்</u>**

- Ø கல்யாணியை தலைநகராக கொண்டு கி.பி.10 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் ஆட்சியை அமைத்தனர்.
- Ø இம்மரபை தொடங்கிய அரசர் இரண்டாம் தைலப்பா (கி.பி.973 - 997) ஆவார்.
- Ø பிற்கால மேலை சாளுக்கிய மரபின் சிறந்த மன்னர்களாக இரண்டாம் சோமேஸ்வரன், இரண்டாம் ஜெயசிம்மன், ஆறாம் விக்கிரமாதித்தியன் ஆகியோர் கருதப்படுகின்றனர்.

Øநான்காம் சோமேஸ்வரன் இம்மரபின் கடைசி மன்னர் ஆவார்.

**<u>கீழை சாளுக்கியர் (கி.பி.7 - 12 ஆம் நூற்றாண்டுகள்)</u>**

- Ø இரண்டாம் புலிகேசியின் சகோதரரான விஷ்ணுவர்த்தன் கீழை சாளுக்கிய மரபை தொடங்கிய மன்னர் ஆவார்.

- கீழை சாளுக்கியர்கள் சோழ மரபுடன் திருமண உறவுகளை கொண்டிருந்தனர். இத்திருமண உறவின் வழியாக தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் ஆவார்.
- இவர் கீழை சாளுக்கிய நாட்டினை சோழ பேரரசுடன் இணைத்து சோழ நாட்டு மன்னர் ஆனார்.

**<u>சாளுக்கியர்களின் பங்களிப்பு</u>**

- சாளுக்கிய மன்னர்கள் இந்து சமயத்தைப் போற்றினர். சமண மதத்தையும் ஆதரித்தனர்.
- இரண்டாம் புலிகேசியின் அவைப் புலவரான இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டுக்களை படைத்தவர் ஆவார்.
- 70க்கும் மேற்பட்ட கோயில்களை ஐஹோலேவில் உருவாக்கியதால் "இந்திய கோயில் கட்டடக்கலையின் தொட்டில்" என ஐஹோலே சிறப்பிக்கப்படுகிறது.
- மேலும் பட்டாடக்கல்லில் உள்ள விருபாக்ஷா் ஆலயம், பாதாமி குகைக் கோவில்கள் ஆகியன மற்ற சிறந்த ஆலயங்கள் ஆகும்.
- விருபாக்ஷா கோயில் காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போல கட்டப்பட்டுள்ளது.
- சாளுக்கியர் காலத்தில் தெலுங்கு இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன.

**<u>பட்டாடக்கல்</u>**

- இது பண்டைய கிரேக்க ரோமானிய காலத்திலேயே புகழ்பெற்ற வரலாற்று தளமாகும்.
- இங்கு காணப்படும் 10க்கும் மேற்பட்ட கோயில்கள் சாளுக்கிய மன்னர்களால் கட்டப்பட்டவையாகும்.

**<u>விருபாக்ஷா் கோயில்</u>**

- இக்கோயில் இரண்டாம் விக்கிரமாதித்தனின் மனைவி ராணி லோகமகாதேவியால் கட்டப்பட்டதாகும்.

- இக்கோயிலின் புரோகிதர் அல்லது அந்தராலா அரைக்கு முன்னால் தூண்களால் ஆன மண்டம் ஒன்று பொதுமக்கள் கூடுகைக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

**இராட்டிரக்கூடர்கள் (கி.பி.8 - 10 ம் நூற்றாண்டு)**

- இராட்டிரக்கூடர்களின் ஆட்சிக்காலம் தக்காண வரலாற்றின் சிறப்புக்குரிய காலமாகும். வட இந்தியாவில் இருந்த இரத்தோர்களின் வழிவந்தோரே இராட்டிடக்கூடர்கள் ஆவர். கன்னடம் இவர்களின் தாய்மொழி ஆகும்.
- இராட்டிரக்கூடர் என்னும் சொல்லுக்கு இராட்டிரம் என்னும் (நாட்டின்) சிறிய பகுதியை ஆளுகை செய்யும் உரிமைப் பெற்றவர்கள் எனப் பொருளாகும்.
- இராட்டிரக்கூட மரபினர் முற்கால மேலை சாளுக்கியர்களிடம் இராட்டிர அதிகாரிகளாக பணியாற்றியவர்கள்.
- பதாமியை ஆண்ட இரண்டாம் கீர்த்தி வர்மனின் இராட்டிர அலுவலராக இருந்த தந்தி துர்க்கர் கி.பி.742இல் எல்லோராவை கைப்பற்றினார்.
- மால்கெட் நகரை தலைநகராக கொண்ட இவரது பேரரசு வடக்கே நாசிக் வரை பரவியிருந்தது.
- கி.பி.756இல் தந்தி துர்க்கர் மரணமடைந்த பிறகு முதலாம் கிருஷ்ணர் பட்டமேற்றார்.
- இவரைத் தொடர்ந்து இவரின் மகன் இரண்டாம் கோவிந்தன் ஆட்சியில் அமர்ந்தார்.
- இவர் வேங்கியின் மீது படையெடுத்து வென்றார்.
- கங்கவாடி, காஞ்சிபுரம், மாளவம் ஆகிய மன்னர்களுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டார்.
- கோவிந்தனுக்கு அடுத்து பதவிக்கு வந்தவர் துருவன் (கி.பி.780 - 790) என்பவர் ஆவார். இவர் சிறந்த ஆட்சியாளராக விளங்கினார்.
- பல்லவ மன்னர் தண்டி வர்மனை வென்றார். இலங்கையை கைப்பற்றி அடிமைப்படுத்தினார். இவரது காலத்தில் இராட்டிரகூட அரசு புகழின் உச்சத்தை அடைந்தது.

- Ø மூன்றாம் கோவிந்தனுக்குப் பிறகு அவரின் மகன் அமோக வர்ஷன் தமது 14ம் வயதில் மன்னர் ஆனார்.
- Ø அடுத்து பதவியேற்ற அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் மூன்றாம் கிருஷ்ணர் (கி.பி.936 - 968) ஆவார்.
- Ø இவர் தக்கோலம் போரில் சோழர்களை வென்று, தஞ்சாவூரைக் கைப்பற்றி இராமேஸ்வரம் வரையில் வந்தார்.
- Ø இராட்டிரக்கூடர்களின் கடைசி அரசர் இரண்டாம் கார்கா ஆவார்.
- Ø இவர் கல்யாணியை ஆண்ட சாளுக்கிய அரசர் இரண்டாம் தைலப்பா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.
- Ø இதனால் இராட்டிரக்கூட பேரரசு முடிவுக்கு வந்தது.

**இராட்டிரக்கூடர்களின் சிறப்புகள்**

- Ø இவ்வரசர்களில் துருவன், மூன்றாம் கோவிந்தன், மூன்றாம் இந்திரன் ஆகியோர் வட இந்தியாவில் படையெடுத்து தோற்கடித்தமையால் வட இந்தியாவின் வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தனர்.
- Ø இராட்டிரகூடர்களின் தென்னிந்திய படையெடுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

**இராட்டிரக்கூடர்களின் பங்களிப்புகள்**

- Ø எல்லோரா குகைகள் சாளுக்கியர்களாலும் பின்னர் இராட்டிரகூடர்களாலும் குடையப்பட்டவை ஆகும்.
- Ø இக்குகைக் கோயில்களில் இந்து, புத்த, சமண மதக் கடவுளர்கள் காணப்படுகின்றனர்.
- Ø இங்குக் காணப்படும் கைலாசநாதர் கோயில் ஒரே பாறையில் குடையப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய கோயிலாகும்.
- Ø முதலாம் கிருஷ்ணர் கைலாசநாதர் கோயிலை எல்லோராவில் கட்டினார்.
- Ø மும்பைக்கு அருகில் உள்ள எலிபெண்டா குகைக்கோயிலை கட்டி முடித்தவர்கள் இராட்டிரக்கூடர்களே.
- Ø அமோக வர்ஷன் இலக்கியங்களை வளர்த்தார்.

- ø மேலும் இவர் கன்னட மொழியில் கவிராச மார்க்கம் என்ற இலக்கியத்தை படைத்துள்ளார்.
- ø இவரின் ஆசிரியர் ஜினசேன் என்பவர் பார்சுவநாதரின் வாழ்க்கை வரலாற்றை பார்சுவ உதயம் என்ற நூலாகப் படைத்தார்.

**ஹொய்சாளர்கள் (கி.பி.11-14 ஆம் நூற்றாண்டு)**

- ø துவார சமுத்திரத்தை ஆட்சி செய்தவர்கள்.
- ø இம்மரபில் குறிப்பிடத்தக்கவர்கள் விஷ்ணுவர்த்தனர், இரண்டாம் வீராபல்லாளா ஆவர்.
- ø இம்மரபின் பிற்கால மன்னர்களில் சிறந்த பேரரசர் மூன்றாம் பல்லாளா.
- ø இவர் கி.பி.1310 இல் மாலிக்கபூரால் தோற்கடிக்கப்பட்டார்.
- ø இவரது மகன் நான்காம் பல்லாளா தந்தை விட்டுச் சென்ற போர்களை தொடர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.
- øஇவரது மறைவிற்குப் பின் ஹொய்சால அரசு முடிவுற்றது.

**ஹொய்சாளர்களின் பங்களிப்பு**

- øமைசூர் அரசு அமைவதற்கு வழியமைத்தனர்.
- ø கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டனர்.
- ø துவார சமுத்திரம், பேளூர் ஆகிய இடங்களில் ஏராளமான கோயில்களை கட்டினர்.
- ø அக்கோயில்களில் இராமாயணம், மகாபாரத காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ø நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் ஆகியோர் இக்காலத்தில் சிறந்த இலக்கியங்களைப் படைத்தார்கள்.

**காகத்தியர்**

- ø வாரங்கலை ஆண்டவர்கள்.
- ø கல்யாணியை ஆண்ட மேலைச் சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்கள்.
- ø அனுமக்கொண்டா இவர்களது தலைநகரம்.
- ø இவர்களில் குறிப்பிடத்தக்க அரசர் கணபதி ஆவார்.

- இவர் சோழர்களிடமிருந்து காஞ்சிபுரம் பகுதியை வென்றார்.
- கணபதியிடமிருந்து ஆட்சி உரிமையை அவரது மகள் ருத்ராம்பாள் பெற்றார்.
- இவரது ஆட்சியில் நாடு வளமும், அமைதியும் பெற்று விளங்கியது.
- காகத்தியர்களின் இறுதி மன்னரான வினயகத்தேவன் பாமினி சுல்தான், முதலாம் முகமதுஷா என்பவரால் கி.பி.1362 இல் கொல்லப்பட்டதால் காகத்திய அரசு முடிவுக்கு வந்தது.

**காகத்தியர்களின் பங்களிப்பு**

- அனும கொண்டாவில் காகத்தியர்கள் கட்டிய ஆயிரம் தூண் ஆலயம் இவர்களது கட்டிட கலைக்கு நிலைத்த புகழினைத்தரும் ஒன்றாகும்.
- கொள்ளூரில் கிருஷ்ணா நதிக்கரையில் கண்டெடுக்கப்பட்ட உலக புகழ் வாய்ந்த கோகினூர் வைரம் காகத்தியருடையதாகும்.

**யாதவர்கள்**

- தேவகிரியை ஆட்சி செய்தவர்கள். தங்களை புராண நாயகனான கிருஷ்ண பகவானின் வழிவந்தோர் எனக் கூறிக் கொண்டனர்.
- இவர்கள் நாசிக் முதல் தேவகிரி (தௌலதாபாத்) வரையில் அமைந்திருந்த செவுனா பகுதியை ஆண்டதால் செவுனர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- சிங்கனா என்பவர் இம்மரபின் மிகச்சிறந்த மன்னர் ஆவார். குஜராத் மீது பலமுறை படையெடுத்தார்.
- ராமச்சந்திர தேவா இம்மரபின் இறுதி மன்னர் ஆவார். இவரை அலாவுதின் கில்ஜி தோற்கடித்து டெல்லிக்கு திரை செலுத்தும் அரசராக மாற்றினார்.
- இறுதியாக ஹரபாலர் என்ற மன்னர் அலாவுதின் கில்ஜியின் மகன் முபாரக் என்பவரால் கொல்லப்பட்டார்.
- இதன் பின்னர் யாதவ அரசு முடிவுற்றது.

**<u>யாதவர்களின் பங்களிப்பு</u>**

- ø தேவகிரி கோட்டையானது யாதவர்களால் கட்டப்பட்டது.
- ø வலிமை வாய்ந்த இந்திய கோட்டைகளில் இதுவும் ஒன்று.
- ø இக்கோட்டைக்குள் டெல்லி சுல்தானியர்கள் ஜும்மா மசூதி, சார்மினார் ஆகியவற்றை பிற்காலத்தில் கட்டினர்.
- ø யாதவர்கள் அறிவியலையும், வானவியலையும் ஆதரித்து வளர்த்தனர்.

**<u>எலிபெண்டா குகைகள்</u>**

- ø இராட்டிரக்கூடர்களால் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டவை.
- ø மும்பையை அடுத்த சிறு தீவில் அமைந்துள்ளது.
- ø இந்தியாவிற்கு வந்த போர்ச்சுக்கீசியர்கள் அங்கு காணப்பட்ட பெரிய யானை சிற்பத்தின் காரணமாக அதற்கு எலிபெண்டா என பெயரிட்டனர்.
- ø இக்குகைக்கோயில் சிவனுக்கு அற்பணிக்கப்பட்டதாகும். இங்கு அநேக தேவ தேவியர் சிற்பங்களும் உள்ளன.

**<u>தக்காண அரசுகளின் முடிவு</u>**

- øஒன்றுக்கொன்று இடைவிடாமல் நிகழ்த்திய போர்களால் அனைத்து தக்காண அரசுகளும் வலிமையை இழந்தன.
- øமேலும், அலாவுதின் காலத்திலிருந்து தொடர்ந்த டெல்லி சுல்தானியர்களின் தாக்குதல் இத்தக்காண அரசுகளின் வீழ்ச்சிக்கு முழுமையாக வழிவகுத்தது.

*****